
Azadi Ka Amrit Mahotsav

# வருமான வரித்துறை

வழங்கும்

# மோட்டு பட்லு
## மற்றும்
# ஆன்லைன் வாழ்க்கை

INCOME TAX DEPARTMENT



டாக்ஸா என்பது என் பெயர்.
வரி பற்றிய  தகவல் தான் எனது விளையாட்டு.
ஏனென்றால் எனது உணவு - உறக்கம் எல்லாமே வரி தான்.
என் நண்பரே, நான் இருக்கும்போது  நீங்கள் ஒருபோதும் அழ மாட்டீர்கள்!




மோட்டு பட்லு மற்றும் ஆன்லைன் வாழ்க்கை
கருத்துருவாக்கம் - வருமான வரி இயக்குநரகம் (PR, P&P), மயூர் பவன், புது தில்லி
ஓ காசிதா, நமது கணக்கை எப்படி வங்கி முடக்கி வைத்தது?
KYC க்காக நமது PAN-ஐ கேட்டுள்ளனர். திடீரென்று நான் எப்படி PAN-க்கு ஏற்பாடு செய்வது?
BHARAT BANK
ஜாட்கா, நான் இப்போது ஒரு பிரச்சனையில் இருக்கிறேன். PAN வரும் வரை, நான் எப்படி பரிவர்த்தனைகளை செய்வது?
இன்று ஏன் நம் நண்பர்கள் மிகவும் சோகமாக இருக்கிறார்கள். டாக்டர். ஜாட்கா உங்கள் நோயாளிகள் தங்கள் பொறுமையை இழந்துவிட்டார்களா என்ன? ... ஹஹஹா!
காசிதாவின் மாணவர்கள் ஆன்லைனில் பயிற்சி கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன்... அதனால் தான் இந்த '20 வருட அனுபவம்' கலக்கமடைந்திருக்கிறது.
இது எல்லாமே அந்த ஆன்லைனால் வந்தது ... வங்கி இப்போது PAN-ஐக் கேட்கிறது...
புஹூஹூ


சரி சரி... யோசித்துப் பார்த்தால் இந்த 'ஆன்லைன் விஷயம்' உண்மையில் வாழ்க்கையை மிகவும் எளிமையாக்கியுள்ளது.
PAN தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால்.... நீங்கள் எப்போதும் டாக்ஸாவிடம் கேட்கலாம்.
யார் இந்த டாக்ஸா?
"நான் தான் டாக்ஸா"... வரி தொடர்பான ஏதேனும் கேள்விகளுக்குப் பதிலளிக்க உங்கள் வழிகாட்டி... என் நண்பர்களே உங்களுடைய கேள்விகள் தான் என்ன?
நான் எப்படி உடனடி PANப் பெறுவது?
நீங்கள் அதை ஆன்லைனில், உங்கள் வீட்டிலேயே வசதியாக, அதுவும் இலவசமாகப் பெறுவீர்கள். www.incometax.gov.in என்ற இணையத்தளத்தை பார்வையிடவும் மற்றும் ஆன்லைனில் PANக்கு விண்ணப்பிக்கவும்.
உடனே PAN எண்ணைப் பெறுங்கள்.
ஓ... அதாவது வருமான வரித்துறை தற்போது நவீனமயமாகிவிட்டது .



"கண்டிப்பாக!" இப்போது நீங்கள் வருமான வரிப் படிவத்தை மின்னனு மூலம் தாக்கல் செய்யலாம். அதுமட்டுமல்ல. ஈ-ஃபைலிங் போர்ட்டலில் பாதுகாப்பாகச் சேமிக்கப்பட்ட உங்கள் வருமானத்தைத் திருத்தம் செய்யலாம் மற்றும் வரி தொடர்பான தகவல்களை பெறலாம். இவை எல்லாவற்றையும் நீங்களே செய்யலாம்.
அது எப்படி? எங்களின் TDS எவ்வளவு கழிக்கப்பட்டது அல்லது எந்தெந்த சொத்துக்களை விற்றோம் மற்றும் வாங்கியுள்ளோம் என்பது போர்ட்டலுக்கு எப்படித் தெரியும்? ஆன்லைன் போர்டல் ஒரு மந்திரவாதியா?
சிறப்பு... இந்த போர்டல் ஒரு உண்மையான ஜோதிடர் போல் தெரிகிறது... உங்கள் வருமான வரி தொடர்பான அனைத்து விவரங்களையும் சரிபார்க்க நீங்கள் போர்ட்டலில் உள்நுழையலாம்.
உங்கள் வீட்டில் இருந்தபடியே வருமான வரிப் படிவத்தை தாக்கல் செய்யலாம்... நீங்கள் அதை பல முறை சரிபார்த்து திருத்தலாம். நீங்கள் உறுதி செய்த பின் ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.
போர்ட்டலில் எனக்கு தின்பண்டங்களும் கிடைக்குமா?
காசிதா, நீங்கள் எப்படி எங்கள் இடத்திற்கு எந்த அழைப்பும் இல்லாமல் தின்பண்டங்களுக்காக வருகிறீர்களோ அதேபோல் நீங்கள் www.incometax.gov.in என்ற இணையத்தளத்தில் உள்நுழைந்து உங்கள் கணக்கு விவரங்களை நீங்கள் விரும்பும் நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் சரிபார்க்கலாம்.



ஹஹஹா... அங்கு சிற்றுண்டிகளை விட சிறந்ததை நீங்கள் பெறுவீர்கள்.
அது என்ன டாக்ஸா?


வருமான வரி செலுத்துவதன் மூலம், உங்கள் தேசத்திற்கு சேவை செய்வதற்கும், திருப்தி அடைவதற்கும், பொறுப்புள்ள குடிமகனாக இருப்பதில் பெருமை கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கும்.
அது உண்மைதான்... ஆனால் முதலில் நான் எனது PANஐப் பெற வேண்டும், அப்போது தான் எனது வங்கி தொடர்பான பரிவர்த்தனைகள் மீண்டும் சீராக தொடங்கும்.



டாக்ஸா! என்னிடம் இன்னும் ஒரு கேள்வி உள்ளது. நமது வீட்டில் இருந்தபடியே நாம் செலுத்தவேண்டிய வரி அல்லது நாம் திரும்பப் பெறும் பணம் எவ்வளவு என்பதையும் தெரிந்துகொள்ள முடியுமா?
டாக்ஸா, அவரது மாணவர்கள் ஆன்லைனில் அவருக்கு கட்டணம் செலுத்துகிறார்கள். ஆனால், பாவம் இவருக்கு, ஆன்லைன் வேலையின் அடிப்படைகள் கூட தெரியாது, அதனால்தான் அவர் குழப்பமடைந்துள்ளார்.
"வருடாந்திர தகவல் அறிக்கை" - இதன் மூலம், இந்த ஆண்டு எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். நீங்கள் 3 முக்கிய விஷயங்களைச் சரிபார்க்க வேண்டும் - வருமானம், பரிவர்த்தனைகள் மற்றும் வரி - இவற்றில் நீங்கள் உறுதியாக இருந்தால், நீங்கள் நம்பிக்கையுடன் வரி செலுத்தலாம்.



உங்கள் PANக்கு விண்ணப்பிப்ப தில் இருந்து தொடங்குவோம்.


பட்லு, டாக்டர் ஜாட்கா மற்றும் காசிதா ராம் ஆகியோருக்கு ஆன்லைனில் விண்ணப்பம் செய்தார் மேலும் ஒரு சில நிமிடங்களில் அவர்களுடைய மின்னஞ்சல்களில் தங்கள் PANஐப் பெற்றனர்.
நானும் பெற்றேன்
ஆஹா...எனது PANஐ ஏற்கனவே நான் பெற்று விட்டேன்.



இதோ பாருங்கள்! இது தான் ஆன்லைன் வாழ்க்கையின் பலன். ஆன்லைன் வருமான வரித்துறை... உங்கள் வீட்டில், உங்கள் விரல் நுனியில்.
இதன் பொருள் என்னவென்றால், எனது வரித் தகவலைப் பற்றி நான் அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ளலாம்.


"கண்டிப்பாக!" ஏற்கனவே மோட்டுவும் பட்லுவும் ஆன்லைன் ஆர்வலர்களாக இருக்கிறார்கள்... நீங்களும் அவர்களுடன் இணைந்தால்... 4 நண்பர்களும் ஆன்லைனில் வரி செலுத்த தயாராக இருப்பீர்கள்.
மோட்டு, இவர்கள் இருவரையும் அவர்களின் பிரச்சனைகளில் இருந்து விடுவித்துள்ளோம். இதற்கு நிச்சயம் ஒரு சமோசா விருந்து தேவை.
சமோசா... அதை நான் வழிமொழிகிறேன் .... எது என்னை இயக்குகிறது தெரியுமா... ஹா ஹா ஹா.
மீண்டும் சந்திப்போம்... நாங்கள் இருவரும் எங்கள் கணக்குகளைப் புதுப்பித்து, வரிப் படிவங்களை தாக்கல் செய்ய இருக்கிறோம்.
ஓ... நான் சமோசாக்களை ஆன்லைனில் ஆர்டர் செய்கிறேன்... அது உங்கள் இடத்திற்கே விநியோகம் செய்யப்படும்.


ஓ நண்பா ... இவர்கள் குறிப்பை உணர்ந்து ஒரு படி முன்னே இருக்கிறார்கள் இன்னும் சில நாட்களில் அவர்கள் எங்களுடன் ஆன்லைனில் கூட பேசுவார்கள் என்று நினைக்கிறேன் .. ஹஹஹா?
சரி நண்பர்களே... நான் இப்போது செல்ல வேண்டும்.
மிகவும் நன்றி டாக்சா.... நீங்கள் வரும் போதெல்லாம் எங்களின் அனைத்து வரிகள் தொடர்பான சந்தேகங்களையும் தீர்க்கிறீர்கள்


வருமான வரி தொடர்பான தகவல்களை எப்போதும் தெரிந்து வைத்திருப்பது நல்லது


நன்றி. உங்கள் உதவி தேவைப்படும் போதெல்லாம் நாங்கள் உங்களை அழைப்போம்
நீங்கள் ஆன்லைனில் ஆர்வலராகி, சரியான நேரத்தில் உங்கள் வரியைச் செலுத்தினால், நீங்கள் ஒரு பொறுப்புள்ள குடிமகனாக இருப்பீர்கள்.


ஆமாம்.....
காசிதா ஆன்லைனில்
ஆர்டர் செய்த சமோசா
இப்போது விநியோகம்
செய்யப்பட்டது. என்ன
சுவை என்ன சுவை ....
பாருங்கள் நண்பர்களே...
வாழ்க்கை இப்பொழுது
எவ்வளவு எளிதானது என்று
... நீங்களும் கால
நிலைக்கேற்ப உங்களை
புதுப்பித்தது
கொள்ளுங்கள்.
www.incometax.gov.in
போர்ட்டலில் உள்நுழைந்து,
உங்கள் வரி விவரங்களைப்
புதுப்பியுங்கள்.
முற்றும்

# புதிர்





# படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்







# மற்ற பதிப்பு

**கீழே கொடுக்கப்பட்டுள்ள, வரவிருக்கும் கதைப் புத்தகத்தில், உங்கள் வீட்டில் இருந்தபடியே வருமான வரி தொடர்பான உங்கள் எல்லாக் கவலைகளையும் எப்படித் தீர்க்கலாம் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.**



Azadi Ka Amrit Mahotsav

